IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC . 85/ 2025 Date : 22.05.2026 P.W.4 / LW.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திக் | ஆதார்எண் | |
| தந்தை பெயர் | ஏழுமலை | தொழில் | ஹோட்டல் மாஸ்டர் |
| கிராமம் | உளுந்தூர்பேட்டை | வயது | 36 |
| 1, 2 எதிரிகள் ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் உளுந்தூர்பேட்டையில் வசித்து ஹோட்டல் மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1-யை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் ராஜி என்பவர் கையொப்பம் செய்தார். சுமார் 1-1/2 வருடங்களுக்கு முன்பாக நான் காவல்நிலையத்திற்கு சென்ற போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். **பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் விசாரித்த போது சண்டையை பற்றி தெரியாது என்று தான் சொன்னேன்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது 24.08.2022 அன்று 07-00 மணிக்கு உளுந்தூர்பேட்டை காவல்நிலையத்தார் காவல்நிலைய குற்ற எண். 368/2022 வழக்கு சம்மந்தமாக சம்பவஇடத்திற்கு வந்து சம்பவஇடத்தை பார்வையிட்டு படம் வரைந்த போது நானும், முருகன் என்பவரும் பார்வைமகசரில் கையொப்பம் செய்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை</u>**

**மறுவிசாரணை – இல்லை.**

Typed by steno–Typist M.Sowmiya

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.05.22 16:24:10 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC . 85/ 2025 Date : 22.05.2026 P.W.3 / LW.2**

| பெயர் | ராஜி | ஆதார்எண் | |
|---|---|---|---|
| தந்தை பெயர் | கண்ணன் | தொழில் | ஆட்டோ ஓட்டுநர் |
| கிராமம் | உளுந்தூர்பேட்டை | வயது | 32 |
| 1, 2 எதிரிகள் ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் உளுந்தூர்பேட்டையில் வசித்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1–யை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1–க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்ன தகராறு என்று நேரிட்டு எனக்கு தெரியாது.போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது அ.சா. 1 உளுந்தூர்பேட்டை சேலம் ரோட்டில் இரண்டு கடைகள் கட்டி வாடகைக்கு விட்டிருந்தார் என்றும், இந்நிலையில் 23.08.2022 ம் தேதி இரவு 7.30 மணியளவில் அ.சா. 1 அய்யங்கார் பேக்கரி அருகே நின்றிருந்த போது ஸ்ரீதர்ராஜா , மற்றும் அருள் பிரகாஷ் ஆகியோர் பேக்கரில் உள்ளவர்களை பார்த்து தேவிடியா பசங்களா வெளியே வாங்கடா எங்களுக்கு மாமுல் கொடுக்காமல் எப்படி கடை நடத்தலாம் என்று அசிங்கமாக திட்டினார் என்றும், அதை பார்த்த அ.சா. 1 ஏன் இப்படி பேசுகிறீர்கள் என கேட்டார் என்றும், கடை என்னுடையது நான் ஏன் மாமுல் தரவேண்டும் என்று கேட்டார் என்றும், அதற்கு ஸ்ரீதர்ராஜா அ.சா. 1 னை பார்த்து தேவிடியா பையா அப்படி தான்டா பேசுவோம் என அசிங்கமாக திட்டி, கன்னத்தில் அறைந்தார் என்றும், அருள்பிரகாஷ் அ.சா. 1 னை அசிங்கமாக திட்டி கையில் வைத்திருந்த தடியால் முதுகில் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தினார் என்றும், பின்னர் எதிரிகள் செல்லும் போது கொலை மிரட்டல்விடுத்தார்கள் என்ற சங்கதியை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அவர்களுக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை</u>**

**மறுவிசாரணை – இல்லை.**

Typed by steno–Typist M.Sowmiya

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.05.22 16:24:17 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.